# ‘இண்டியா’ கூட்டணியை காங்கிரஸ் சுய நலத்துக்காக இழந்துவிட்டது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூன் 10-

‘இண்டியா’ கூட்டணியை காங்கிரஸ் தனது சுய நலத்துக்காக முதுகில் குத்தும் கூட்டமாக மாறிவிட்டது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.

அது வருமாறு

இந்தியா கூட்டணி கட்சிகளின் ஆலோசனை கூட்டம் டெல்லியில் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் மொத்தம் 23 அரசியல்கட்சிகள்பங்கேற்றுள்ளன. இந்தியா கூட்டணி தொடங்கியதிலிருந்து அக்கூட்டணியின் மைய சக்தியாக திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கியது. தமிழ்நாட்டில் நடந்த சட்டமன்ற தேர்தலுக்குப் பின், காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இழைத்த துரோகத்தினால் மனக்காயமுற்றிருக்கும் கட்சியினரின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற வகையில், இந்தியா கூட்டணிக் கூட்டத்தில், அதாவது காங்கிரஸ் பங்கேற்கும் கூட்டத்தில் திமுக பங்கேற்காது என அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் ஏற்கனவே அறிவித்து விட்டார். ஆம் ஆத்மியும் பங்கேற்கவில்லை. டெல்லி முழுவதும் ராகுல் காந்தி மற்றும் காங்கிரசுக்கு எதிராக பரபரப்பு போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. அதில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக காங்கிரஸ் நம்மை சார்ந்து வளர்ந்து வந்தது.

ஆனால் இன்று அவர்கள் நம்மைமுதுகில்குத்திவிட்டார்கள் என இருந்தது. இதுபோன்று மேற்குவங்க முன்னாள் முதல்வர் மம்தா பானர்ஜி, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார், டெல்லி முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், பஞ்சாப் ஆம் ஆத்மி முதல்வர் பகவந்த் மான் மற்றும் பிற தலைவர்களின் பெயரிலும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தது. அதில் காங்கிரஸ் கட்சியை சார்ந்து இருக்க முடியாது என்ற வாசகங்களும் டெல்லி வீதிகளில் இடம்பெற்று இருந்தன.

தமிழகத்தில் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைத்துள்ள தவெகவுக்கு அழைப்பு விடுக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ள கட்சிக்கு மட்டுமே இந்த கூட்டத்தில் பங்கேற்க


தினகரன்
ஜூன் 9, 2026 செவ்வாய்க்கிழமை
தள்ளாடும் கூட்டணி
இந்தியா கூட்டணி கட்சிகளின் ஆலோசனை கூட்டம் டெல்லியில் நேற்று நடந்தது. இந்த கூட்டத்தில் மொத்தம் 23 அரசியல் கட்சிகள் பங்கேற்றுள்ளன. இந்தியா கூட்டணி தொடங்கியதிலிருந்து அக்கூட்டணியின் மைய சக்தியாக திராவிட முன்னேற்றக் கழகம் இயங்கியது. தமிழ்நாட்டில் நடந்த சட்டமன்ற தேர்தலுக்குப் பின், காங்கிரஸ் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இழைத்த துரோகத்தினால் மனக்காயமுற்றிருக்கும் கட்சியினரின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கின்ற வகையில், இந்தியா கூட்டணிக் கூட்டத்தில், அதாவது காங்கிரஸ் பங்கேற்கும் கூட்டத்தில் திமுக பங்கேற்காது என அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் ஏற்கனவே அறிவித்து விட்டார். ஆம் ஆத்மியும் பங்கேற்கவில்லை. டெல்லி முழுவதும் ராகுல் காந்தி மற்றும் காங்கிரசுக்கு எதிராக பரபரப்பு போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. அதில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக காங்கிரஸ் நம்மை சார்ந்து வளர்ந்து வந்தது. ஆனால் இன்று அவர்கள்

அழைப்பு விடுக்கப்பட்டு இருப்பதாக காங்கிரஸ் கூறியுள்ளது. மேற்குவங்க சட்டமன்ற தேர்தலில் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் கட்சி, ஆட்சியை இழந்ததை தொடர்ந்து, அக்கட்சியில் உட்கட்சிப் பூசல் மற்றும் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சுமார் 15 ஆண்டுகளாக மேற்குவங்கத்தில் அதிகாரத்தில் இருந்தார் மம்தா பானர்ஜி. இந்தியா கூட்டணி என்றாலும் மேற்குவங்கத்தில் காங்கிரஸ் தனித்தே போட்டியிட்டது. இக்கூட்டணி இருந்தாலும் மாநில கட்சிகளுடன் மோதல் போக்குடன் பிடிவாதமாக காங்கிரஸ் கட்சி இருந்து வந்துள்ளது. தற்போது திரிணாமுல் காங்கிரஸ் கட்சியில் அதிருப்தி அடைந்த எம்எல்ஏ.க்கள், எம்பிக்கள் பலர் வெளியேறும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

சிவ சேனாவின் தலைவர் உத்தவ் தாக்கரே பங்கேற்கவில்லை. தேசியவாத காங்கிரஸ் எம்.பி. சுப்ரியா சுலே பங்கேற்றார். தமிழகத்திலிருந்து வைகோ, திருமா உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். கூட்டத்துக்கு பிறகு விசிக தலைவர் திருமாவளவன் பரபரப்பு குற்றச்சாட்டை கூறியுள்ளார். அதில், காங்கிரஸ் செயல் விரும்பத்தக்கது அல்ல. நடந்து முடிந்த தேர்தலில் காங்கிரஸ் செயல்பாடு திமுக, திரிணாமுல், மார்க்சிஸ்ட்டை பலவீனப்படுத்தி உள்ளது. காங்கிரஸ் கட்சி கையாண்ட அணுகுமுறையால் இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகளிடையே அதிருப்தி நிலவி வருகிறது. காங்கிரஸ் தனது செயல்பாடுகளை சுய பரிசோதனை செய்ய வேண்டும். ஒற்றுமையை இன்னும் வலுவாக முன்னெடுப்பதற்கான வழிகளை கண்டறிய வேண்டும் என கூறியுள்ளார்.

பாஜ அரசுக்கு எதிராக தேசிய அளவில் வலுவாக இருந்த இந்தியா கூட்டணியை சுய நலத்துக்காக காங்கிரஸ் பலவீனப்படுத்திவிட்டது. குறிப்பாக மாநில கட்சிகள் கூடவே இருந்து அதன் வளர்ச்சியை முடித்து வைத்துவிட்டதாக அரசியல் நோக்கர்கள் குற்றம் சாட்டுகின்றனர். மொத்தத்தில் இந்தியா கூட்டணி கூட்டம் ஒருமித்த கருத்துகள் எடுக்கப்படாமல் தள்ளாடும் கூட்டமாக முடிந்துவிட்டது.

இவ்வாறு ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சித்துள்ளது.

# கழக மூத்த முன்னோடி குயவர்பாளையம் வீ. பக்கிரி திருவுருவப்படம்!

## புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா திறந்து வைத்து அஞ்சலி!

*புதுச்சேரி, ஜூன்10-*

*புதுச்சேரி மாநிலம், நெல்லித்தோப்பு தொகுதி, குயவர்பாளையம் கிளைக் கழகச் செயலாளரான வீ. பக்கிரி (எ) முனுசாமி என்பவர் தமது 18-வது வயதில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டு, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், திராவிட மாடல் அரசின் நாயகர் தளபதியார் ஆகியோர் வழியில் கடந்த 50 ஆண்டு காலமாக மேற்கண்ட கிளையின் செயலாளராக தொடர்ந்து பணியாற்றி கழக வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்.*

*“அண்ணா நாடக மன்றம்” துவங்கி “கழகத்தின் காவியம்”, “புரட்சியாளர் பாண்டியன்”, “காதலிக்க போகிறேன்”, “கற்பின் கோபுரம்” நாடகங்கள் நடத்தி, கழகத்தின் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்த்தவர்.*

*பாரத பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தமிழர்களை பார்த்து “நான் சென்ஸ்” என்று சொன்னதை எதிர்த்து கருப்புக் கொடி போராட்டம் நடத்தி சிறை சென்றவர். புதுச்சேரியை தமிழ்நாட்டோடு இணைக்கும் இணைப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.*



*தமது 32-வது வயதில் அப்போதைய புதுச்சேரி முதல்வர் எம்.ஓ.எச். பாரூக் மரைக்காயர் முன்னிலையில், புலவர் பொன்னிவளவன் அவர்கள் தலைமையில் இராகு காலத்தில் சுயமரியாதை திருமணம் செய்து கொண்டு, அன்றைய இளைஞர்கள் பலரும் சுயமரியாதை திருமணம் செய்து கொள்ள உதவி புரிந்தவர். மேலும் மறைந்த மாவீரன் சிட்டிபாபு அவர்கள் நினைவாக தன்னுடைய மகனுக்கு “சிட்டிபாபு” என்று பெயர் சூட்டி அழகு பார்த்த பக்கிரி என்கிற முனுசாமி அவர்கள் தமது 82வது வயதில் உடல்நலக் குறைவால் 10.05.2026 அன்று உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார்.*

*அவரது படத்திறப்பு விழா குயவர்பாளையம் குட்டை கரைப்பள்ளி அருகில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வே. கார்த்திகேயன் தலைமை தாங்கினார். புதுச்சேரி மாநிலக் கழக அமைப்பாளர் இரா. சிவா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கழக மூத்த முன்னோடி பக்கிரியின் திருவுருவப் படத்தை திறந்து வைத்து 500 பேருக்கு அன்னதானம் வழங்கினார்.*


*இந்த நிகழ்ச்சிக்கு தொகுதி செயலாளர் நடராஜன், அவைத்தலைவர்பானு கணேசன், மூத்த முன்னோடி ராஜேந்திரன், இளைஞர் அணி தொகுதி அமைப்பாளர் ராம்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*நிகழ்ச்சியில் மாநில அவைத் தலைவர் எஸ். பி. சிவகுமார், கழக சட்டமன்ற உறுப்பினர் விக்னேஷ் கண்ணன், மாநில துணை அமைப்பாளர் தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் லோகையன், பொதுக்குழு உறுப்பினர்கள் சக்திவேல், வேலவன், வேலன், தொகுதி செயலாளர்கள் சக்திவேல், தியாகராஜன், சத்தியவேல், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி, தொகுதி நிர்வாகிகள் அருண், கண்ணன், வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஞானராஜ், சந்தோஷ்குமார், அன்பு, வேல்முருகன், சங்கர், ஏழுமலை, மதியழகன், ரமேஷ், தேவேந்திரன், பொன்னப்பன், மூர்த்தி, வள்ளியம்மை, கலைச்செல்வி, எழிலரசன், ஸ்டீபன் ராஜ், ரவி, ராஜி, கண்ணன், அருள், ஆட்டோ சக்தி, பரிதிமாள், கார்த்திக் இளைஞரணி கார்த்திக், பூஷ்ணபதி, டி எஸ் பெருமாள், யூசுப் கான், சக்திவேல், வெங்கடேஸ்வரன், மற்றும் அவரது குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சேப்பையன் (எ) எல்.ஆறுமுகம்

ஜூன் 10 (2024)



**1952ஆம் ஆண்டு கழகத்தில் உறுப்பினராகி கழகப் பணியாற்றியவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தஞ்சை சட்டமன்றத் தொகுதியில்போட்டியிட்டபோது, மிட்டா, மிராசுகளின் தாக்குதல்களை முண்டாசு கட்டிக் கொண்டு எதிர்த்து நின்று கழகப் பணியாற்றியதால் கலைஞர் அவர்களால் “முண்டாசு சேப்பையன்” என்று அழைக்கப்பட்டவர்.**

**தொடர்ந்து பத்தாண்டுகள் மன்னார்குடி நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

